# (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**ஓ.எஸ்.எண்.131/2021** **நாள்.23.02.2026**

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சகாயநாதன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வனத்தையன் | சாதி | |
| கிராமம் | சிறுநாம்பூண்டி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 56 |

**வா.சா.1**

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தந்தையார் 1989 -ம் ஆண்டு ஓய்வு பெற்றார். என் தந்தையார் உயிருடன் இருந்த வரை நானும், என் தாயார் மற்றும் உடன்பிறந்தோர்களும் ஒரே குடும்பமாக வசித்தோம் என்றால் சரிதான். என் தகப்பனார் 13.01.2020 அன்று இறந்தார். என் தகப்பனார் உயிருடன் இருந்தவரை குடும்ப நிர்வாகத்தை அவர் தான் கவனித்து கொண்டார் என்றால் சரியல்ல. என் அம்மாவும் அவருக்கு பின் நானும் பார்த்து கொள்கிறோம். மேற்கண்ட விபரத்தை வழக்கில் நாங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். என் பாட்டனார் பெயர் மாணிக்கம். வழக்கில் கண்ட சொத்துக்கள் எதுவும் என் பாட்டனார் மாணிக்கம் கிரையம் வாங்கியவை அல்ல என்றால் சரிதான். வழக்கு 3, 4 அயிட்ட சொத்துக்கள் என் தந்தையின் வருமானத்தை கொண்டு அவர் பெயரிலேயே கிரையம் பெற்றவை என்றால் சரியல்ல. 3-வது அயிட்ட சொத்து என் அம்மா பெயரில் உள்ளது. அதே போல் வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்கள் என் அப்பாவின் வருமானத்தை கொண்டு என் அம்மா பெயரில் கிரையம் வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல. 3-வது அயிட்ட சொத்து என் அம்மா பெயரில் உள்ளதாக காட்டும் ஆவணம் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்திற்கான கிரையத்தொகை மற்றும் செலவுகளை என் தந்தையார் தான் செய்தார் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கும் போது என் அப்பா அங்கு இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- ல் என் அம்மா பெயரில் எவ்வளவு சொத்து உள்ளதாக சொல்கிறேன் என்றால் 82 செண்ட் விஸ்தீரண சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு 82 செண்ட் வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் அது பொய்யானதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1-ல் 11 செண்ட் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 82 செண்ட் சொத்தை என் தாயார் கிரையம்

வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் வரை அவருடன் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இருக்கவில்லை. என் அம்மா 2005 ம் ஆண்டு இறந்தார். வா.சா.ஆ.1-ல் கண்ட சொத்து தொடர்பாகவும், என் அப்பா உயிருடன் இருந்தவரை எந்த பிரச்சனையும் இல்லை என்றால் நாங்கள் வெளியூரில் இருந்ததால் அதுவரை விபரம் தெரியவில்லை. அதனால் பிரச்சனை எதுவும் இருக்கவில்லை. 2018 ம் ஆண்டு வில்லங்கம் பெற்று பார்த்தபோது தான் சொத்தில் பிரச்சனை இருப்பது தெரிய வந்தது. அவ்வாறு வழக்குரையுலோ, முதல் விசாரணையுலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கில் அவ்வாறு வில்லங்க சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞரிடம் கொடுத்தேன். 2018 ல் வில்லங்க சான்று பெற்று பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2018 முதல் என் அப்பா 2020-ல் இறக்கும் வரை எங்களுக்குள் பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. பிரச்சனை இருந்தது. என்ன வகையான பிரச்சனை என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் கேட்டோம். பிறகு என் அப்பாவும், 2-ம் பிரதிவாதியும் சொத்தை விற்க முயற்சி செய்ததை தடுத்தோம். அது எந்த தேதி என்றால் 2018- ம் ஆண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபணை மனு கொடுத்தோம். என் அப்பாவிடம் பிரச்சனை செய்ததாக சொல்லும் தேதி தற்போது நினைவில்லை. மேற்கண்டவாறு சொத்தை விற்க முயற்சி செய்தததை தடுத்தாக வழக்குரையுலோ, முதல் விசாரணையுலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட விபரங்களை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேரி வினோ என்பது என் சகோதரி. என்னிடம் காட்டப்படும் 20.01.2012 தேதியிட்ட கிரையப்பத்திரம் பதிவிறக்க நகலானது 3-ம் பிரதிவாதி மேரி வினோ என் மனைவி அமராவதிக்கு கிரையம் கொடுத்த ஆவணம் **20.01.2012 தேதியிட்ட கிரையப்பத்திர பதிவிறக்க நகல் தாக்கல் செய்யப்பட்டு பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்கண்ட ஆவணம் வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 -ல் 1/7 பாகம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1-ம் பிரதிவாதி வழக்கு சொத்து சம்பந்தமாக 2-ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த பாக விடுதலை பத்திரம் என்றால் அதைப்பற்றி தெரியாது. அதிலுள்ள புகைப்படம் 1-ம் பிரதிவாதியுடையது என்றால் சரிதான். அதில் 1/7 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 23.10.2015 தேதியில் என் அப்பா எழுதி கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் என்றால் இருக்கலாம். அந்த ஆவணத்திலும் 2/7 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கண்ட புகைப்படம் என் தகப்பனார்யுடையது என்றால் சரிதான். நான் வேலூரில் 2009 முதல் 2010 வரை பணியாற்றினேன். அதற்கு முன்பு சென்னையில் பணியாற்றினேன். பிறகு விழுப்புரத்தில் பணியாற்றினேன். 1984 வருடத்தில் இருந்து நான் என் சொந்த ஊரில் வசிக்கவில்லை. எப்போது நான் ஊருக்கு திரும்பி வந்து வசித்தேன் என்றால் தற்போது வரை நான் என் சொந்த ஊருக்கு வந்து செட்டில் ஆகவில்லை. நேரம் கிடைக்கும் போது வந்து செல்வேன். விழுப்புரம் மாவட்டம், ஒரத்தூர் எஜமான் கார்டன் என்ற முகவரியில் வசிக்கிறேனா என்றால் ஆமாம். இ.ம.எண். 300/2021 மனுவை 2-ம் பிரதிவாதி மீது வழக்கு சொத்துக்களில் எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்த கூடாது என்று தடையுத்தரவு கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் சார்பதிவாளரை தரப்பினராக

சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்தபோது 4 ம் பிரதிவாதியிடம் இருந்து 20.05.2025 அன்று வழக்கு சொத்து குறித்து நான் கிரையம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் 4 ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற ஆவணத்தின் பதிவிறக்க நகல் தான். **(20.05.2025 தேதியிட்ட கிரைய பத்திரம் பதிவிறக்க நகல் தாக்கல்செய்யப்பட்டு பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பி.சா.ஆ.2 ல் பொதுவில் 6 ல் 1 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ 2 யை நானும், 4 ம் பிரதிவாதியும் படித்து பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தோமா என்றால் ஆமாம். பி.சா.ஆ.2 ல் எவ்வித பாக வழக்கோ அல்லது முன் தேதியிட்ட கிரைய அக்ரிமெண்ட்டோ, கிரைய ஆவணங்களோ இல்லை என்று குறிப்பிடுவதாக கண்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 30.05.2025 தேதியிட்ட 3 ம் பிரதிவாதிஎனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் பதிவிறக்க நகல்என்றால் சரிதான். **(30.05.2025 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் பதிவிறக்க நகல் தாக்கல்செய்யப்பட்டு பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பி.சா.ஆ.3 ல் பொதுவில் 6 ல் 1 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் பாக விகிதாச்சாரம் தெரியாமல் 1/5 பாகம் என்று கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாது என்று என் தரப்பில் மனு தாக்கல் செய்துள்ள நிலையில் நானே ஆவணங்கள் எழுதி வாங்கியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2015 ம் ஆண்டு 2 ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த பாக விடுதலை பத்திரமும்,1 ம் பிரதிவாதி 2010 ம் ஆண்டு 2 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பாக விடுதலை பத்திரமும் நிலுவையில்இருக்கும்போது அவை குறித்து பரிகாரம் எதுவும் கோராமல் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2015 மற்றும் 2010 ம் ஆண்டு ஆவணங்களை அனுசரித்து வருவாய் துறை மூலம் 2 ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது ரத்து செய்யப்பட்டுவிட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 அடிப்படையில் மேற்சொன்ன பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டதாக கூறுகிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.4 -ல் 30 நாட்களுக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவின் பேரில் 2 ம் பிரதிவாதி மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. 2 ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டதை இரத்து செய்ததன் அடிப்படையில் தான் நான் வழக்கு நடத்துகிறேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் 13.02.2025 தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டாஎண்.207 ஆனது 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். இணையவழி ஆவணங்களில் இரத்து செய்யப்பட்டது பதிவேற்ற படாததால் அதன்பின்னிட்டு மனு கொடுத்து அதையும் மாற்றி விட்டோம். அவ்வாறு மாற்றியதாக காட்டும் பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் பெயரிலோ எனக்கு ஆவணம் எழுதிகொடுத்தவர்கள் பெயரிலோ வருவாய் துறை ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் போது நானே ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ள நிலையிலும் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் நான் எந்த பரிகாரமும் கோர தகுதியானவர் அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.